உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

தென் துவாரகாபுரியென்னுஞ் செண்பகவன க்ஷேத்திர
மாகிய ராஜமன்னார்குடியிற்றிருக்கோயில்
கொண்டெழுந்தருளும்

# ஸ்ரீ பழனியாண்டவன்மீது
## பதிகமும்,
## வேலாயுதக்கண்ணியும், நாமாவளிகளும்.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங் கோயிலூர் பரம்பரை
திருச்சாய்க்கைமாநகரம்
**ஸ்ரீமத்-வீரசேகரஞானதேசிகமூர்த்திகள்**
மாணாக்கரான
**மௌனம்—இராமலிங்கசுவாமிகள்**
திருவாய் மலர்ந்தருளியது.

இவை

ஷை சுவாமிகள் மாணாக்கருளொருவராகிய ராஜமன்னார்குடி
கு. பே. கிருஷ்ணசுவாமி நாயுடு அவர்களால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

PRINTED AT THE D. D. S PRESS, TRICHY.

1902.



இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான்
சர்க்கரைப்புலவர் பௌத்திரர் கோடகுடி
மகா-ா-ாஸ்ரீ

## சே. சர்க்கரை முத்து முருகப்புலவர்

இயற்றிய சாத்துக்கவி.

வெண்பா.

முக்கனியைத்தேவா முதத்தைக்கோற்றேனைவெள்ளைச்
சர்க்கரையைப்போலுலகத்தார்விரும்பத்—தொக்ககண்ணி
சூட்டினன் கூர்வேலவற்குத் தொல்வினையை-மோனத்தால்—
வீட்டினனிராமலிங்கவேள்.

---

சாற்றுக்கவி.

திரிசிரபுரம் தென்னூர் மர்தை, ரிஸல்ட் பாடசாலை
மானேஜரும், பென்ஷன் அவல்தாருமாகிய

## வீ. சுப்பிரமணியப்பிள்ளையவர்கள்,

கூறியது.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

---

சீர்கொண்ட பிரணவப் பொருளாகி யெங்குநிறை
 திகழ்கின்ற ஞான சுடராய்ச்
சின்மயா நந்தமாய்த் தன்மயா தீதமாய்ச்
 சிந்தனைக்கெட்டாததாய்த்
தார்கொண்ட பன்னிரு புயாசலக்கடவுளாய்ச்
 சண்பகாரணிய மென்னுந்
தலத்தினி லெழுந்தருளு பழனியாண்டவனுமாஞ்
 சரவண பவன்றனக்கு
கார்கொண்ட பதிகம்வேலாயுதக் கண்ணியும்
 நாமாவளிக்கோவையும்

நலமிகுஞ் சொன்னயம் பொருண்யம் பொலிவுற
நற்றமிழ்ப் பாவுரைத்தான்
பேர்கொண்ட வனுபவச் சுகநிலை பொருந்தியப்
பேரின்ப வாரி மூழ்கிப்
பேசரிய நிட்டைகொளிராமலிங்கனெனும்
பெயரருந்தவ மௌனியே.

---

சாற்றுக்கவி.

திருக்கோயிலூர் சாய்க்கைமடம்
ஸ்ரீமத்-வேலாயுதசுவாமிகளின் மாணாக்கருளொருவராகிய
திரிசிரபுரம்—தென்னூர்

## தி. த. குழந்தைவேல்பிள்ளையவர்கள்

கூறியது.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

---

திருவளர் மாட மோங்குஞ் செண்பகாரணிய மேவும்
முருகன்மேற் பதிகம் வேலாயுதக்கண்ணி மொழிந்தானன்றே
இருவினைப் பாசமற்றே யேகாந்த நிலையுற்றோங்கு
மருமைசேர் மவுனமிராமலிங்கனு மறிஞன்றானே

---

இராஜமன்னார்குடி, கைலாசநாதன் கோயிற்
கிராமப்பட்டாமணியம்
மகா-ா-ா-ஸ்ரீ

## சொ. பிச்சையா பிள்ளை,

அவர்களியற்றிய
சாத்துக்கவி—சந்தவிருத்தம்.

படியில் வாழடியார்புகழ்ந்திடுபொமணிப்பதி யாறுசூழ்
கடிகொள்சண்பகமா நகருறைகந்தன்மேற்புகலின்கவி
அடியர்தேடுயர் மோனநங்குரு ராமலிங்கனவருளினால்
கெடியபல்லுயி ரெங்கணுஞ்சொல நின்மலச்சுகநிறையுமே.

# முகவுரை.

நித்த--சுத்த-புத்த--முத்த--சத்திய--பரமாநந்த--சர்வவி
யாபக, ஸ்வயம்பிரகாச, சைதன்ய—சாட்சாத்காரமான ஸ்ரீசிவ
சுப்பிரமண்யக்கடவுள் திருப்பரங்குன்ற முதலிய படைவீடுக
ளில் இனிது வீற்றிருந்து விளங்குவதுடன்--ஸ்ரீ துவாரகாநாத
னும் செங்கமலவல்லியும் திருக்கோயில் கொண்டெழுந்தருளி
யிருப்பதும், நவதீர்த்தங்களுமமைந்துள்ளதும், சண்பகாரண்
யம்-- தட்சண துவாரகை--- வாசுதேவபுரியென்னும் பெயர்க
ளையுடையதுமான இராஜமன்னார்குடியில் நாட்டுக்கோட்டை
நகரமடாலயத்தின் குடபால் எழுந்தருளி பலபல அற்புதாதி
சயங்களைச் செய்து இனிது வீற்றிருக்கின்றனர். என்னை? வரு
டந்தோறும் பழநிமலைக்கு காவடிகொண்டு செலுத்தும் பிர
திக்ஞையைத்தமக்குப்பற்றுக் கோடாயுள்ள மகாதேவப்பட்ட
ணவாசியாகிய சைவச்செட்டியாரொருவர் ஏதோ சில அச
ந்தர்ப்பத்தால் ஓராண்டு பழநிமலைக்கேகக்கூடாமற்போன
தால் இங்ஙனம் ஆண்டவன்பாற் புரிந்த முறை பிறழ்தலாகிய
துக்கமேலிட்டால் கலுழ்ந்தழுது படுக்கையிலுழன்றுச் சிறிது
தன்னையறியாது கண்ணயர்ந்த அவசரத்தில், எமது அருட்
பெருந்தடங்கடலாகிய அறுமுகப்பெருமான் ஒரு திருமுகப்
பெரியோன்படி வந்தாங்கி அன்னார் கனவிற்றோன்றி "ஏபக்த
சிரோன்மணி! நீ யாதொன்றாலுங் கவலற்க, பழநிமலைமுதலிய
ஸ்தலங்கள் நம்மிருக்கையேயாயினும் யாம் ஈண்டு ராஜமன்
னார்குடி நாட்டுக்கோட்டைச் செட்டிகள் மடாலயத்தின் குட
பால் திருக்கோயில் கொண்டெழுந்தருளாநிற்கின்றோம் நி

ணது பிரார்த்தனையை அங்குசென்று செலுத்தி மனவமைதி பெறுக" என்று திருவாய் மலர்ந்து திருவுருக்கரந்தனர். அன்றுதொட்டு பழநியாண்டவனென்னும் பெயருடன் பலராலும் ஸ்தோத்தரிக்கப்பட்டு வருவதுடன் வருடா வருடம் மேற்கூறிய செட்டியார் குலத்தவராலும் ஏனையபக்திமான்களாலும் காவடித்தொண்டும் உத்சவாராதனைக் கொண்டாட்டமும் நடந்தேறிவருகின்றது. இக்கருணையங்கடலாகிய பழநியாண்டனை, அடியேனைத் தடுத்தாட கொண்டசற்குருநாதனாகிய ஸ்ரீமத்மௌனம் இராமலிங்கசுவாமிகள் உழுவலன்போடு ஸ்தௌத்தியஞ்செய்து பாடிய திருப்பதிகம், காவடிக்கண்ணி நாமாவளிமுதலியன தோத்திரத்தோடு சாத்திரமாயுமிருத்தலால் இவையெம்போலியர்க்கு மிகுதியும் பயன்படுமெனக்கருதி அடியேன் கனிவிருப்போடு இதனை அச்சிடத்துணிந்தனன்.

இங்ஙனம்,

சு. பெ. கி.

உ

ஓம்குருவேநம:

## நூல்

### கலித்துறை.

சீர்மிகும் பொன்னி வளஞ்செறி தென்றுவரா புரியில்
வார்மிருங் கூந்தனல் வள்ளிதெய்வானை மகிழ்ந்தணைதோட்
கூர்மிகும் வேலன்றிருவடிக்கேகவி கூறுதற்குக்
கார்மிகுமைங்கரத் தந்தியென்றுநின்று காப்பதுவே

### துறுங்கழிநெடில்விருத்தம்

சீர்நிறைந்திலங்குஞ் செண்பைமாவனஞ்சூழ்
தென்றுவாரகை யெனும்பதியில்
ஏர்நிறைந்திலங்கு மிருவர்நாயகியோ
டெழிற்றிருக்கோயில்கொண்டவனைத்
தார்நிறைந்திலங்கும் பரனுமையீன்ற
சண்முகச்சரவணபவனைப்
பார்நிறைந்திலங்குந் துதிசெயுங்கடவுட்
பழனியாண்டவனைநாம்பணிவாம். 1.

அத்தனேயமரர் தமைப்புரந்தருள
வசுரர்கள் குலமெலாமொழித்த
மூத்தனேமுதல்வாமுக்கணன்புதல்வா
மூகனேன் மோகவாழ்வதனில்
மத்தனாயுழலுமயக்கொழித்தனது
மலர்ப்பத மருளுநாளுளதோ
சித்தனே செண்பை வளநகர்வாழுந்
தேவனேபழனியாண்டவனே. 2.

ஆவியேயமுதே யருட்பெருங்கடலே
யறுமுகாவுனதடியவர்போற்
பாவியேன்வேடம்புனைந்ததேயன்றி
பதைத்தெழும்மனத்தையோர்நாளுந்
தாவவிலடக்குஞ் சதுரிலேற்குனது
தாண்மலரருளுநாளுளதோ
வாவிசூழ்சென்னை வளநகர்வாழும்
வள்ளலே பழனியாண்டவனே. 3.

மண்பொலிநிதியும் வானவர்வளனு
மன்னிடா தழிவதையோர்ந்துந்
தண்பொலிந்திலங்குந் தத்துவாதீதத்
தன்மயநிட்டையைச்சாராப்
புண்பொலிவுடலின் மயலினுழலும்
புன்மையேற்கருளுநாளுளதோ
பண்பொலிசென்னை வளநகர்வாழும்
பண்ணவா பழனியாண்டவனே. 4.

ஓதியுமுணர்ந்து மயலவர்க்குரைத்து
முரைத்தவைக்கிணங்கிடவொழுகாப்
பேதையேன்பிறக்குக்குங்குமஞ்சுமந்தப்
பேறிலாக்கரநிகர்க்கின்றேன்
சோதியேயுனது சுகநிலையதனிற்
றுன்றிநின் றகன்றிடா தருள்வாய்
நீதியேசென்னை வளநகர்வாழு
நிமலனே பழனியாண்டவனே. 5.

மித்தையாமுலகைப் பொருளெனக்கருதி
வெவ்வினைப் பலபலபுரிந்து

தத்தையங்கனையார் விழிவலைப்பட்டுத்
　தழல்படுபஞ்செனக்கருகிச்
சித்தையானந்தச் சத்தினைமறந்தச்
　சிறியனேற் கருளுநாளுளதோ.
பத்தர்சூழ்சென்னை வழநகர்வாழும்
　பகவனே பழனியாண்டவனே. 6.

அரியமாநுடமா யவயவநிறைவா
　யவையுளும்புருடனாய்ச் செனித்துந்
தெரியருமறையினெறிதனைவிலக்கித்
　தீங்குறும்விலக்கினைத்தினமும்
புரியுமிப்பதகப் புலையனேன்றனக்குன்
　புனைகழற்றிருவடி தருவாய்
துரியனேசென்னை வளநகர்வாழுஞ்
　சுத்தனே பழனியாண்டவனே. 7.

நெருநலிலுளன்மற் றின்றிலையெனுமோர்
　நிகழ்பரிபூரணமாயப்
பெருமைசேர்சான்றோர் புகன்றதையறியாப்
　பேதையேன் பிணமெனப்புகலுஞ்
சருமமதாதி யாறினைச்சதமாய்த்
　தளர்வுறுதமியனேற்கருளாய்
திருநிறைசென்னை வளநகர்வாழுந்
　தேசிகா பழனியாண்டவனே. 8.

இல்லறமதனி லுறைந்துளோ ருயர்ந்த
　வேனைய வாச்சிரமிகட்கே
நல்லதோரறனைப் புரிந்தவரருளா
　னணுகுவரின்பவீடதனை

யில்லதையிழந்து மிருந்தவம்புரியா
வேழையேற் குயர்நிலையருளாய்.
முல்லைசூழ்செண்பை வளநகர்வாழு
முதல்வனேபழனியாண்டவனே. 9.

வாக்கொடுமனமுங் காயமுமசையா
வரத்தொடுபோக்கதுமிழந்து
நீக்கமிறுரியா நீதமாநிலையை
நீசனே னடையுநாளுளதோ
பூக்கொணர்ந்தென்று நின்னடியேத்தும்
புகழ்மலிமுனிவரர்க்கருளுஞ்
தேக்கொளிச்சண்பை வளநகர்வாழுஞ்
செல்வமேபழனியாண்டவனே. 10

குன்றுதோறுறையுங் குமரனேயடியார்
கொடும்பவமொழித்திடக்கருதித்
தென்றுவாரகையாந் திருப்பதிவதியுஞ்
செழுஞ்சுடர்க் கந்தனேசிறியேன்
வன்றுயர்பெருக மரணமதடைந்து
மறுபிறப்புற்றிடாநெறியை
யின்றருள்செண்பை வளநகர்வாழு
மிறைவனே பழனியாண்டவனே. 11

பண்டுநல்லருணகிரியு நக்கீரர்
படிபுகழ் குறுமுனிமுதலோர்
தண்டுழாய்மார்பன் மருகனேநினது
சரணபங்கயமடைந்தமைபோற்
றொண்டனுநினது பதாம்புயநிழலிற்
றுரிசறக்கலக்கு நாளுளதோ

தண்டைதாளொலிப்பத் தகரின்மேலேறுஞ்
சண்முகா பழனியாண்டவனே. 12

முற்றிற்று.

---

# குருவே நம:

---

## காவடிக்கண்ணி.

1. கங்காதரன்பயந்த கணபதிதன்போருளா
லங்காவடிக்கணியா னறைகுவன்வேலாயுதனே

2. தென்றுவணாதன்னிற் றிருக்கோயில்கொண்டாய் நீ
நன்றருளுநற்பழனி நாதவேலாயுதனே

3. ஆவிக்கமுதேயறுமுகவா யென்வினையைச்
சேவித்த வக்கணநீதீர் பழனிவேலோனே

4. தேன்காவடியெடுத்துன் சேவடிக்கேயாட்டுமென்பர்க்
கூன்காவடியொழிக்கு மொண்பழனிவேலோனே

5. காவடியைச்சேர்க்குங் கனவடியார்தங்களைநின்
செவடிக்கேவந்தருளச் செய்பழனிவேலோனே

6. நம்பியுனையடைந்தார் நற்பதவிபூண்டிருக்க
வெம்பலடியேன்வினையோவேலாயுதனே

7\. செல்லபவனகாநகரிற் சேர்ந்திலங்குஞ்சண்முகவென்
புண்ணையொழிப்பாய் புகழ்பழனிவேலோனே

8\. நாலாட்சுமக்கு நரம்பெலும்புதோறசையை
மாலாற்சுமந்தலுத்தேன் வண்பழனிவேலோனே

9\. சென்மப்பெருகுழியிற் சேராமலென்றனையுன்
றன்னடியிற்சேர்க்கத் தகும்பழனிவேலோனே

10\. பிறந்தலுத்தேன்பன்னாட் பெரியசுகசிட்டைதனிற்
சிறந்திருக்கவென்றருள்வாய்த் தென்பழனிவேலோனே

11\. எத்தனையோதந்தையன்னை யீன்றலுத்தாரிக்கனமே
பித்தனைக்குன்றாட்கமலப் பேரருள்வேலாயுதனே

12\. கருவின்றுயரைக் கருத்திலுன்னியென்றனுள
முருகுஞ்செயலோ ரொளிர்பழனிவேலோனே

13\. பாங்காயநின்னடிக்கே பாமாலைச்செய்துநிதந்
தேங்காமற்சாத்தவருள் செய்பழனிவேலோனே

14\. கல்விச்செருக்குக் கடையேனைச்சாராமல்
வல்வினைதீர்த்துன்பதத்தில் வைபழனிவேலோனே

15\. தெளியுமுளத்திருக்குஞ் சிற்பரநின்சீரடியென்
களிமனத்தாலெண்ணறியேன் கவின்பழனிவேலோனே

16\. உன்னையடைந்தோர்கடமைக் கொப்பரியவின் பல்கி
யென்னையிடரழுத்த லேன்பழனிவேலோனே

17\. சைவப்பயிர்தழைக்கச் சம்பந்தனாகிவந்து
தெய்வப்பிழம்பாய்த் திகழ்பழனிவேலோனே

18. உய்யும்வகையாகு மொண்பொருளைச் சேர்ந்திருக்கச்
செய்யும்வழியையருள் செய்பழனிவேலோனே

19. கண்குளிரநின்னருளைக் கண்டவன்பர்மற்றுமொரு
புண்ணுடலைச் சேர்வதுவும் பொய் பழனிவேலோனே

20. ஆழிச்சிறுதுரும்பா யல்லலுறுமென்மனமோர்
நாழிக்குணீக்கியரு நற்பழனிவேலோனே

21. மாலுறையுந்தென்றுவரை மாநகரில் மன்னுமெழி
லாலுறைவோனீன்ற வரும்பழனிவேலோனே

22. கற்றைக்குழலார் கனவனையன்பொற்பாவைக்
குற்றக்குருந்தா யொளிர்பழனி வேலோனே

23. கன்மனத்தோரேனுமென்றன் கண்ணருவிகண்டிரங்க
வன்மனத்தாலேன்வாராய் வண்பழனிவேலோனே

24. சின்னஞ்சிறியார்போற் றீயவிடயத்தழுந்தி
யின்னலுறுமென்மயறீ ரேர்ப்பழனிவேலோனே

25. கல்லின்வலியகடுங் காலற்கஞ்சினனிற்
புல்லியிருக்கப் புரிபழனிவேலோனே

26. நிருவிகற்பநிஷ்டை நிரந்தரமாயானடைய
வருளாயோதேவ ரமர்பழனிவேலோனே

27. எச்செயலுந்தானு யிலங்குமுனைநம்புமியா
னச்சமுறலாமோ வருட்பழனிவேலோனே

28. பாவியேன்பல்காற் பதைபதைத்துவாடிநினைக்
கூவினேன்வாராய் குளிர்பழனிவேலோனே

29. மரணதசையிலுறும் வன்றுயருக்கஞ்சியுனைச்
சரணமடைந்தேன றகும்பழனிவேலோனே

30. சும்மாவிருக்குஞ் சுகநிலையைச்சாராமல்
வெம்மோகமுற்றேன் மிளிர் பழனிவேலோனே

31. ஜோதிமயமாய்த் துலங்கமனத் தாசையைவைத்
தாதியடைந்தே னளிபழனிவேலோனே

32. தேகமகலுநிலை தேறவெனக்குணாத்துச்
சோகமிலாநன்னிலைதா தொல்பழனிவேலோனே

33. உள்ளபடியடைய வுள்ளுமெனையெல்லோரு
மெள்ளாமலின்பநிலை யீபழனிவேலோனே

34. நிஷ்டைதனிலிருக்கு நேர்மையொடு தேகம்விழ
யிஷ்டமெனக்குயிகவேபழனிவேலோனே

35. சொல்லுக்கடங்காச் சுகநிலையிலென்றனைநீ
யெல்லும்பகலு மிசைபழனிவேலோனே

36. தண்ணீரரும்பாலாய்ச் சார்மணலைச்சர்க்கரையாய்ப்
பண்ணலரிதோ பகர்பழனிவேலோனே

37. காவடியைநின்றனக்கு கார்த்திகையிற்சேர்ப்போர்க்குச்
சீவடியும்பொய்யுடலைத் தீர்பழனிவேலோனே

38. முருகாயெனத்தினமு மூகருமுன்பேர்நினைக்கின்
வ்ருமோஜெனன மலைப்பழனிவேவோனே

39. சரவணனேயென்றுனிதஞ் சாற்றுங்குறுமுனிக்கு
மரணபயந்தவிர்த்த வண்பழனிவேலோனே

40. பூசத்திற்காவடிநின் பொன்னடியிற்சேர்ப்போருக்
காசுற்றடல்வருமோ வணிபழனிவேலோனே

41. கண்கண்டதெய்வமுயர் கந்தனேயென்றுலகோர்
நண்போடுரைத்த னலம்பழனிவேலோனே

42. கார்த்திகைப்பாலுண்ணுங் கடவுளடியார்களுக்கே
பேர்த்துங்கருவிலையே பின்பழனிவேலோனே

43. குமரனேதெய்வமெனக் கொண்டாடுமென்பரெல்லா
மமரரினும்பெரிய ராவாரெம்வேலோனே

44. நவவீரர்சூழ்ந்துவர நன்மாதிருவருட
னவமுடையேன்பால்வந் தருள்பழனிவேலோனே

45. தோகைமயின்மீதேறித் தோகையர்கள் பாலமர
வாகையயிலேந்தியென்முன் வாபழனிவேலோனே

46. சேவற்கொடிபிடித்தென் றீவினையைச்சுட்டொழித்தாள்
மேவலரைச்செற்றதிரு மெய்ப்பழனிவேலோனே

47 சரியைமுதனான்கிலொன்றுஞ் சார்ந்தறியாநாயேனை
துரியபதத்தழுத்துந் தூய்பழனிவேலோனே

48. முத்தேயருமணியே மூடனேனுள்ளிருக்குஞ்
சித்தேயெனையருளிற் சேர்பழனிவேலோனே

49. என்னையொருபொருளா யெண்ணியன்றேசற்குருவாய்த்
தன்னையளித்தனையென் றாய்ப்பழனிவேலோனே

50. அன்னையினுமினிய வாரியனாய் வந்தருளிப்
பின்னமிலையென்றுரைத்த பேர்ப்பழனிவேலோனே

51. பின்னமிலையென்றறிந்தும் பேதையேனூழ்வினையா
லன்னிலையினில்லா தலைந்தேன்வேலாயுனே

52. மற்கடம்போனின்னையென்றும் வந்தித்தறியாத
துற்குணனையாண்டருளாய்ச் சோதிவேலாயுதனே

53. ஆவின்பாற்காவடியை யாண்டவனின்னருள்சேர்க்க
மேவியெடுப்பவர்க்குண் வீடருள்வேலாயுதனே

54. சமைத்தக்கயல்மீனைத் தண்ணீரிற்பாய்ந்தோட
வமைத்ததுனக்கரிதோ வையாவேலாயுதனே

55. குலைகருங் சட்டமுதற் சொல்லரியநோயையெல்லா
மேலத்தவிர்ப்ப தெளிதேவேலாயுதனே

56. சுழுத்திதனிலிவ்வுலகந் தோன்றுதவாறதுபோ
லழுத்துவையுமென்னிலையி லாறுமுகவேலோனே

57. உன்னையடைந்தவெனக் குன்மீதிலாணைகண்டாய்
பின்னைச்சனனமிலாப் பேறளிவேலாயுதனே

58. சுகராதிமாமுனிவர் தோய்ந்தசுகநிட்டையைநீ
யிகமேயெனக்கருள்வா யெந்தாய்வேலாயுதனே

59. யாகாவாராயினுநன் னாகாக்கவெஃறறைந்த
பாகாமொழியறியாப் பாவியன்வேலாயுதனே

60. கொலைமுதலாந்தீயவினை குயிற்றினற்கேபாழ்நரகு
மெலையில்பிறப்பிறப்பு மென்றவேலாயுதனே

61. கற்றறிந்தமோழையெனக் காங்கேயாநின்னடியை
யுற்றறியேனென்போ லிங்குண்டோவேலாயுதனே

62. கல்லாத நூலனைத்துங் கற்றாலுநின்னருளொன்
றில்லார்க்குமுத்திநிலை யேதுவேலாயுதனே

63. எத்தனை நூல்கற்றாலு மினியசித்திபெற்றாலு
முத்தியுண்டோஞானமலால் மொழிவாய்வேலாயுதனே

64. கற்றகலைவல்லபத்தாற் கவிமழையாய்ப்பெய்தாலும்
வெற்றறிவாய்நில்லார்க்கு வீடோவேலாயுதனே

65. உன்னாலெனக்கெவையு முண்டுநினையேபணியு
மென்னாலுனக்காவ தேதுவேலாயுதனே

66. தத்துவக்கற்றற்றுநிதந் தன்னிலையினின்றோரே
முத்தவரென்றே மொழிந்தவேலாயுதனே

67. ஆகமமாதியதா யனைத்துமுணர்ந்தாலுந்
தேகநானென்றிருப்போர் தீயோர்வேலாயுதனே

68. சோகமெனும்பாவனையாற் றூயோருனையடைந்துந்
தேகோகத்தான் றிகைத்தேன்வேலாயுதனே

69. வாசால்த்தாலுனது வாசாமகோசரத்தை
நேசித்தடைதலுண்டோ நிகழ்த்துவேலாயுதனே

70. எங்கும்பெருவெளியா யெவ்விடத்துந்தன்னையன்றித்
தங்கவிலாமுத்தியது தானேவேலாயுதனே

71. உன்னைப்பணிவோர்க் குல்கவின்பந்தந்தருளாற்
றன்னையறியநலந் தந்தருள்வேலாயுதனே

72. தீதனைத்துஞ்செய்யினுஞ்சேய் சிறுதருந்தாய்போற்
கோதனைத்துநீக்காய் குழந்தைவேலாயுதனே

73. அவ்வவர்கள்வேண்டுவ தளித்ததனையர்ந்தமதி
லெவ்வமறுநன்னிலையி லேற்றும்வேலாயுதனே

74. ஆறெழுத்தையுச்சரிக்கு மடியர்வினைவேறறுத்துக்
கூறுபடாமெய்நிலையிற் கூட்டுவேலாயுதனே

75. திருநீறுஞ்சாதனமுஞ்சேர்ந் திலங்குமன்பருக்குக்
குருவுருவாயோர்மொழியைக் கூறும்வேலாயுதனே

76. நின்னைச்சரண்புகுதா நீசர்தமையெப்பொழுதுஞ்
சின்னப்படக்கெடுக்குஞ் செந்தூர்வேலாயுதனே

77. ஆங்காரப்பொல்லா வசுரர்களையிட்ழித்த
தீங்கரும்பேயின்சுவையே திருத்தணிவேலாயுதனே

78. சூரன்பலத்தைத்தூளாக்கி வெற்றிகொண்டு
யேரகத்திற்றங்கி யிருக்கும்வேலாயுதனே

79. வேடருருக்கொண்டுவிசையனொடு போர்புரிந்த
வாடரவக்கச்சை யரன்சுதவேலாயுதனே

80. அருணகிரிநாத னருந்தமிழாவின்புறுமென்
கருணைக்கடலே கடவுள்வேலாயுதனே

81. நக்கீரதேவர்நவின்றதிருச் செந்தமிழ்க்கே
யெக்களிப்புக்கொண்டருளு மீசாவேலாயுதனே

82. இன்னம்பலவடியா ரியற்றுதிருப்பாமாலை
பொன்னங்கழலணிந்த போரூர்வேலாயுதனே

83. சித்திபெற்றமெய்யடியார் செய்தணிந்தநின்கழற்குப்
புத்தியற்றேன்சொல்லோர் பொருளோவேலாயுதனே

84. குதலைமொழியையன்னைக் கொண்டாடுமோர்மையெனச்
சிதடனுரைநின்செவியிற் சேர்த்தருள்வேலாயுதனே

85. அசுரர்குலஞ்செற் றமரருல்கனைத்துஞ்
சசிபதிக்கேபட்டமருள் சங்கரவேலாயுதனே

86. தெய்வானையைமணந்து தேவர்துதிசெய்தேத்த
ஐராவணத்தில்வரு மாண்டவவேலாயுதனே

87. நன்னீராற்காவடிக ணன்கமைத்துவந்தவர்க்குப்
பன்னீராய்ச்செய்தருளும் பார்புகழ்வேலாயுதனே

88. மால்வனார்பண்டொருகால் மஃறத்தெனுமோர்லீலைசெ
[ய்த
சீலமிகுந்தென் றுவரைத் தேவேவேலாயுதனே

89. நான்முகனைவன்சிறையி னூட்டியவைத்தவுயர்
மான்மகட்காய்வேங்கைமரமானவேலாயுதனே

90. பிரமனறியாப் பிரணவத்தினுண்மைதனை
யரனார்தனக்கருளு மாரியவேலாயுதனே

91. மாதர்வடிவமலஞ்செறிந்ததென் றறிந்துங்
காதல்கொளுமென்மனத்தின் கட்டழிவேலாயுதனே

92. பெண்மயலாற்கெட்டொழிந்த பேயர்களைக்கண்டிருந்
[துங்
கண்முலைமேற்செல்லலொழி கதிர்காமவேலோனே

93. கோதையர்தன்மையலினாற் கோடானுகோடியர்கள்
தீதடைந்ததென் றறிந்தேன் திருப்பதிவேலாயுதனே

94. பெண்மயலைவிட்டவர்க்கே பேருலகில்முத்தியென
வண்மையுடனறிந்தேன் வரமருள்வேலாயுதனே

95. கானற்சலத்தைநம்பிக் கால்கடுக்கவோடுதல்போ
லீனச்சகத்தைநம்பி யெய்த்தேன்வேலாயுதனே

96. எங்குஞ்சிவமயமா யெப்பொழுதுங்கண்டிருந்தும்
பங்குபடயெண்ணலிது பாபம்வேலாயுதனே

97. எந்தப்பொருளதனி லென்மனதுசென்றாலு
மந்தப்பொருட்சிவமா யமைத்தருள்வேலாயுதனே

98. சம்பந்தராதித் தனியடியார்பெற்றவைபோ
லெம்பந்தநீக்கி யினிதளிவேலாயுதனே

99. பட்டினத்தார்பத்ரகிரிப் பண்புடையார்பெற்றநலங்
கிட்டவுனையடைந்தேன் கெதியருள்வேலாயுதனே

100. நீங்காதவானந்த நிட்டைதனிலெனைநீ
பாங்காய்த்தினமும் பதியவைவேலாயுதனே

101. சஷ்டிவிரதந் தவிராதிருப்போருக்
கிஷ்டசித்தியாவுநல்கு மெட்டிக்குடிவேலோனே.

102. கார்த்திகையிற்பட்டினியாங் கடுவிரதஞ்செய்வோர்க்
[குச்
சீர்த்திருவாமின்பநல்குந் தென்பழனிவேலோனே

103. வெள்ளிசெவ்வாய்நல்விரதம் விரும்பித்துதிப்போர்க்குப்
புள்ளிமயிலேறிவந்து புன்மைதவிர்வேலோனே

104. எள்ளுக்குளெண்ணெயென வெங்குநிறைந்தவுனை
யுள்ளுமன்பர் தீவினையை யோட்டும்வேலாயுதனே

105. சித்திராநற்பருவஞ் சீர்காவடியெடுக்கும்
பத்தர்களுக்குன்னருள்தா பரங்கிரிவேலாயுதனே

106. விசாகத்திற்காவடியை விருப்பமுடன்சேர்ப்பவருக்
கசாரமெனுந்தீவினையை யறுத்தருள்வேலாயுதனே

107. பங்குனியுத்தரத்திற் பத்தியொடுகாவடியைத்
துங்கமுடன்சேர்ப்போர்க்குத் துன்பமொழிவேலோனே

108. முத்திவடிவா முதல்வனே யென்றனுக்குச்
சித்திமுத்தியீந்தருளுஞ் சிற்பரவேலாயுதனே

109. குன்றுதொறுங்குன்றனைய கொங்கைநல்லார்தன்னொ
[டுநீ
சென்றுவிளையாடுஞ் சேவகவேல்ாயுதனே

110. திரிபுடியைநீக்கியெனைச் சீரோதகம்போலத்
துரியாதீதத்தில்நிதந் தோயவைவேலாயுதனே

111. சண்முகவனென்னுமுயர் சற்குருநின் றண்மலர்த்தாள்
வண்மைமிகுஞ்சீரடியார் வாழிவேலாயுதனே

வேலாயுதக்கண்ணி முற்றிற்று.

ஸ்ரீசற்குருவேநமஃ

## நாமாவளிகள்.

ஐங்கரவறுமுகசிவநடராஜா
அம்பிகையருட்குருவடிகள் நமோநமோ
கங்காதரஹர கணகிருபாளு
கடையனையனுதினங்கைவிடாதாள்வாய்

## குருநாமாவளி.

1. சரணஞ்சரணஞ் சற்குருசரணம்.
தமியனுளிருந்தருள் சிற்குருசரணம்

2. மரணபவத்துயர் தீர்த்தருள்சரணம்,
வடிவிலாவடிவதிற் சேர்த்தருள்சரணம்

3. எங்குநிறைந்தருட் குருவேசரணம்,
மென்னுளிருந்தருளருவேசரணம்

4. வெங்கலிநீக்கிய வீராசரணம்,
வெந்துயர்போக்கிய சூராசரணம்

5. ஞானசின்முத்திரைக் கையாசரணம்
நால்வருக்கருளிய மெய்யாசரணம்

6. வானவர்க்கருளிய வடிவேசரணம்
வாதவூரர்க்கருள் முடிவேசரணம்

7. ஆல்தனிலிருந்தருளரனேசரண
மியாவர்க்குமருள்செயுங் கரனேசரணம்

8. பாற்கடலுறைந்தருள்பரனேசரணம்
பாண்டவர்க்கருளிய திரனேசரணம்

9. அரியயனரன்மூதற்கரியாய்சரண
மாண்டவனேகுரு துரியாசரணம்

10. பரிபூரணசிவ பரனேசரணம்
பார்தனிலெமக்கருள் கரனேசரணம்

11. இனிப்பிறவாநெறிபதியவைசரண
மேழையேனிணையன்றிக் கெதியிலேன்சரணம்

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.

---

## விநாயகர்நாமாவளி.

1. ஆனைமுகவனின் முள்சரண
மடியனேனகத் திருந் தாள்சரணம்

2. ஈனமதகற்று மிறைவாசரண
மென்னுடைநாவிருந் தறைவாய்சரணம்

3. சரணஞ்சரணந் தந்திமுகத்தோய்
தங்கியிருந்தரு ளென்தனகத்தே

4. மரணபவமெனு வன்றுயர்தீர்த்தாள்
மாமுநிலேதனி லெந்தனைச்சேர்த்தாள்

5. மஹாகணபதே குருசரண
வருவிக்கினந்தவிர் திருசரணம்

6. அகாரமுதல்மூன் றட்சரப்பொருளே
யடிமையின்கவலையை யகற்றலுன்னருளே

7. கணபதிகுணபதி வந்தருளே
கைவல்லியபதந் தந்தருளே

8. இணையறுநிலைதனி லென்னையுமே
யிடையருதமைத்தருள் முன்னவனே

9. வல்லைபங்கி லமர்ந்தவனே
வந்தடியார்க்கருள் தந்தவனே

10. அல்லல்றுத்தரு ளாண்டவனே
யரனுமையீன்றருள் தாண்டவனே

11. ஐங்கரவரனரு ளதிபதியே
யடியனைக்காத்தருள் கதிநிதியே

12. சங்கரகணபதி சங்கரசுதனே
சடுதியிலென்வினை தவிரு மற்புதனே

13. மறைமுடிதனிலுறை கணபதியே
வடிவிலாவடிவருள்குணநிதியே

14. கறைமனமொழித்தருள் கரிமுகனே
கடுவினையழித்தருணிறைசுகனே

15. துரியபதப்பொரு ளானவனே
தொண்டனைக் காத்தருள் மோனவனே

16. அரியயனரன்முதற் கரியவனே
யகிலவிக்கினந்தவிர் பெரியவனே

17. சத்திக்கணபதி தற்பரனே
தன்னடைந்தார்க்கரு ளற்புதனே

18. கவலையொழித்தருள் கணநாதா
காரணமான குணதீதா

19. முத்திச்சுகந்தரு முன்னவனே
மோகமொழித்தருள் தென்னவனே

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.

---

## சுப்பிரமணியர்நாமாவளி.

1. சிவகுருபர சிவனருள்பாலா
தென்றுவராபுரி வாழ்வடிவேலா

2. பவமெனும்பிணியை யறுத்தருள்மருந்தே
பார்பதியீன்றரு ளறுசிரக்குருந்தே

3. அரனுடைப்புதல்வா வைங்கரர்க்கிளைவா
அறுமுகவாவெங்கள் கவலையைக்களைவாய்

4. சரவணபவகுக சண்முகநாதா
சஞ்சலநீக்குமென் சற்குருநாதா

5. தென்றுவராபுரி மேகோர்வாழுந்
திருமுருகாசிவ நேசர்கள் தோழா

6. அன்றமரர்க்கிறை மகளைமணந்தோ
யாரியனேகுற வள்ளிபுணர்ந்தோய்

7. சுந்தரவடிவேல் தாங்கியகையா
சுப்பிரமணியெனும் பேர்புனைமெய்யா

8. வெந்துயர்பொடிபட மெய்யருள்குகனே
வேலவனேசிவசங்கரன்மகனே

9. ஆறுமுகாகொடுஞ் சூரசம்மாரா
ஆண்டவனேபழ னுபுரியூரா

10. சிறியதீவினை தீர்த்தருள்தேவா
தேவரைக்காத்தருள் மால்மருகாவா

11. அய்பாவாமுரு கையாவா
வழகியபன்னிரு கையாவா

12. மெய்யாவடிவே லய்யாவா
விரைவொடுமெயிலுடன் வேந்தேவா

13. முருகாமுத்துக் குமராவா
மூவரில் முதல்வர்க்குங்குரவா வா

14. திருவாவினன்குடித் திருவேவா
திருவேரகத்துறை குருவேவா

15. எங்குநிறைந்தருள் முத்தேவா
வென்னுளிருந்தருள் சித்தேவா

16. சங்கரசண்முக தேவேவா
தன்னடைந்தவர்க்கருள் கோவேவா

17. சூர்ப்படைமுழுவதும் வென்றவனே
துன்மதிச்சமணரைக் கொன்றவனே

18. சீர்சமராபுரி நின்றவனே
திருத்தணிமலையுறை கின்றவனே

19. சம்போசிவ சங்கரசிவனே
தார்குழலுமைசுத மெய்த்தவனே

20. எம்பவம்நீக்க யிசைந்தவனே
யின்னமிர்தாமொழி தந்தவனே

21. சங்குசக்ரகோதண்டபாணி
தன்னுடைமருகதெண்டாயுதபாணி

22. கங்கைபுனைந்தவ னீன்றருள்வேணீ
காரிருள்நீக்கியே கடையனையாணீ

23. சிவசிவசிவசிவ சிற்கனபோதா
சிவகுருபரசிவசற்குருநாதா

24. தவமுனியகத்தியர்க் கருளியதாதா
தமியனுக்கருட் குருவாய்வரும்பாதா

25. சிவசிவசிவசிவசண்முகநாதா
சீக்கிரம்வந்தெனக் கருடனைத்தாதா

26. பவலயமொழித்தருள் பரமபொற்பாதா
பத்தர்கள்பழவினை தீர்த்தருள்வேதா

27. ஹரிஓம்அரஹர சரவணபவனே
யாறுமுகாவெனக் கருளளிசிவனே

28. பரிபூரணகிரு பாகரபரனே
பாவியசஞ்சித வினையொழி யரனே

29. அரஹரபரசிவ முருகையா
வாறுமுகம்பன் னிருகையா

30. சூரவெனுமலர்புனைகுளிர்மெய்யா
குவலயந்தனில்வருகுருதுய்யா

31. முருகநாமமே யானந்த மதை
முற்றுணர்வது பிரமானந்தம்

32. சரவணபவனெனு நாமந்தான்
றன்னிலையாஞ் சொரூபானந்தம்

33 தென்றுவராபுரிவாழ்கந்தா
சேவுக்கொடியுடையோன் மைந்தா

34. என்றுயர்தீர்க்கவே சம்பந்தா
வென்றுருவெடுத்தநீ யின்பந்தா

35. சம்பந்தனென வுருவெடுத்தோனே
தமியன்வெம்பவங்கெடத் தடுத்தோனே

36. நின்னைநானம்பினேன்சத்தியமே
நிருவிகற்பமருணித்தியமே

திருச்சிற்றம்பலம்-முற்றிற்று.

---

## சிவநாமாவளி.

1. ஓம்சிவசங்கர சம்புவையே
நாந்தினந்துதிசெய்து நம்புதுமே

2. சாம்பசிவசிவ சங்கரபரனே
ஏம்பலிப்பார்க்கரு ளெங்குருவரனே

3. மங்களநாயகி பாகனையே
வந்திக்கப்போகுநந்தீவினையே

4. பொங்கர வணிந்திடும் புண்ணியனே
பொன்னடிதந்தருடிண்ணியனே

5. ஆனந்தநாடக மாடியவா
வடியர்கள்தீவினைசாடியவா

6. எங்குநிறைந் தருள்காரணனே
யெங்குறை தீர்த்தருள் பூரணனே

7. திங்களைத் தரித்ததோர் சிற்கனனே
சிறியனைக்காத்தருணிற்குணனே

8. மங்கைமகிழ்ந்திடு மாதேவா
வெங்களைக்காத்திடநீவாவா

9. சங்கரசிவசிவ தேவேவா
தமியனுக்கருடர நீவாவா

10. அமரர்க் காவிஷமருந் தாண்டவனே
யடியன் துற்குணமொழித்தாண்டவனே

11. அரியயனறியொணுவாதியனே
வழிவிலாப்பதமருள்ஜோதியனே

12. துரியமுங்கடந்தமெய்த் தொன்மையனே
சுகநிலையெனக்கருள் சின்மயனே

13. அடியவர்க்கெளியவ னானவனே
மிடியனெனுளத் துறைமோனவனே

14. மொய்குழலுமையொடுவெந்தருளே
முடிவிலாநந்சுகந்தந்தருளே

வேறு.

15. கனபரிபூரண பட்டொளித்தேவா
கலியாணசுந்தரக்கடவுளேநீவா

16. வளம்புகழ் திருமறை முடிவளர்தேவா
மங்களநாயகிகொழுநனேவாவாவாதேவா

17. மான்மழுக்கையுடன் மழவிடைதனில்வா
மங்களாம்பிகையுடனென்முன் வாதேவா

18. சங்கரசிவசிவசம்புமெய்த்தேவா
தமியனேற்குயர்பதந்தந்திடநீவா

19. சிவசிவசிவசிவ சின்மயநாதா
சீக்கிரம்வந்தெனக் கருட்பதநீதா

20. அரஹரசிவசிவ வருட்கடனிதியே
யடியனுக்களித்தருள்பிரிவிலாக்கதியே

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.

## அம்மை நாமாவளி.

1. சிவவோர் திரிபுர சுந்தரியே
தீமை யகற்று நிரந்தரியே

2. பவல்ய நீக்கு பராபரியே
பாதகம் போக்கு நிராகரியே

3. மங்கள நாயகி வளமயிலே
வெங்களைக் காத்தரு ளிளங்குயிலே

4. பங்க மொழித்தருள் பார்பதியே
பாலனைக்கா த்தருள்சீர்நிதியே

5. அரஹர சிவைசிவை யமைம்குணியே
யடியனைக்காத்தருளுமைமணியே

6. திரநிலை யெனக்கருள் சற்குணியே
தீயனுக் கருள்புரிநிற்குணியே

7. உன்னத நிலைதனி லென்னையுமே
யொழிவற வைத்தருள் முன்னவளே

8. பின்ன மொழித்தருள் பெண்மணியே
பிரிவிலா நிலையருள் கண்மணியே

9. மனதொழி மங்கள நாயகியே
மைந்தனுக் கருளளி தாயகியே

10. கனபரி பூரண காரணியே
கவலை யறுத்தரு ளாரணியே

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.

## சண்டேசுவரர் நாமாவளி.

1. ஆவினை யுயர்வென வறிந்தோனே
தேவனற்றிருவடி செறிந்தோனே

2. சண்டேச னெனும்பெயர் பூண்டவனே
தாதையைத் தாளறுத்துத் தாண்டவனே

3. அண்டராற் புகழ்பெறு மாண்டவனே
யாண்டவன்றிருவடி பூண்டவனே

4. பஞ்சமூர்த் திகளிலொன் றானவனே
பாவியேன் வினையொழி சான்றவனே

5. பரசிவப் பரிகலச் சேடமுண்டவனே
பவமெலா மறுத்தரன் பாதங்கொண்டவனே

6. முடிவினி லுனைத்தொழ முதன்மைபெற்றவனே
மூடனேற்குயர் முத்தியருளு நற்றவனே

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.

---

## சம்பந்தமூர்த்திசுவாமிகள் நாமாவளி.

1. சீர்காழிப் பதியவ தாரங்கொண்டவனே
திருவுமைப் பாலெனு மமுதமுண்டவனே

2. சார்ந்தவர்க் கருளுமை யீன்றருள் குகனே
தமிழ்ஞானசம்பந்தனெனவருஞ் சுகனே

3. சிவபாதவிருதயர் பகவதியாருஞ்
செய்தவப் பேற்றினாலவதரித்தவனே

4. திருக்கோலக் காவிற்பொற்றாளம்பெற் றவனே
சிறியனேன் வினையொழி ஞானநற் றவனே

5. திருவறத் துறைமுத் துச் சிவிகை பெற்றவனே
சீர்முத் துக்குடைமுத் துச் சின்னமுற்றவனே

6. திருப்பட்டீச்சரத் துறைசிவ னருட்படியே
சீர்முத்துப்பந்தரும் பெறுந்தவ வடிவே

7. திருநீற்றுப்பதிகத்தாற் றென்னவ னழனீக்கித்
தீமனச்சமணர்தஞ்செருக்கொழித் தவனே

8. போகமார்த்தபூண் முலைவனை யேட்டை
வேகாமற் றழறனில்விளங்கச் செய்தவனே

9. வாழ்கவந்தண ரெனும்பதிக வேடதனை
வைகைநீர் கிழித்தெதிர் செலப்புரிந்தவனே

10. பற்பலவிதத்தினாற் சமணரை யொழித்துப்
பரசமயகோளரியெனும் பெயர்தரித்தோய்

11. மட்டிட்டபுன்னைய மென்னுநற் பதிகத்தால்
மயிலையிலெலும்பைப்பெண் ணாக்கும்வல்லவனே

12. சைவமெனும்பயிர் தழைக்கவுற்றவனே
ஜைதவீதச் செயல்பல விளைத்தாற்றவனே

வேறு.

13. கலியாணந்தனினல் லூர்ப்பெருமண மெனுமுயர்
காதலாகிக் கசிந்தெனுமிரு பதிகத்தாற்
கடவுளின் றரிசனைக்காண வந்தவருநின்
காதலியுடன்பெருஞ் சோதிசென்றவனே

வேறு.

14. திருஞான சம்பந்தனென் றிடுவோமே
தீவினையாவையும்வென் றிடுவோமே

15. திருஞான சம்பந்தன் சேவடிசேர்வோம்
ஜெனனமரணமெனு நோய்ப்பயந் தீர்வோம்

16. சம்பந்த மூர்த்தி தயாநிதியே
வெம்பந்தந் தீர்த்தெனக்கிகதியே

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.

---

## அப்பர்சுவாமிகள் நாமாவளி.

1. திருவாமூர்ப்புக ழனூர்மாதினியார்
செய்தவப் பேற்றினுலுதித்தவனே

2. மருணீக்கியாரெனு மாதவத் தோனே
திருநாவுக்கர செனுந்தீ தொழித்தவனே

3. கூற்றுயின வாறெனுமுயர் பதிகத்தா
லாற்றல்செய் சூலைநோய்மாற் றிக்கொண்டவனே

4. மாசில் வீணையெனும் பாசுரம்புகன்றா
யாசுடை நீற்றறைதனிலிருந்தகன்றாய்

5. சுண்ணவெண் சந்தனச்சாந்தென துதித்தாய்
திண்ணியகளிறதாற் சேர்துயரொழித்தாய்

6. சொற்றுணைப் பாசுரஞ் சொன்னவேந்தவனே
கற்றுணைத்தோணியாய்க் கடல்கடந்தவனே

7. அப்பூதிநாயனா ரரிய புத்திரனை
யரவந்தீண் டிறவாமற்றுதிபுரிந்தவனே

8. உழவாரப்பெரும்பணியுகந்தவனே
யுலகப்பற்றனைத்தையுமிகந்தவனே

9. பொன்னையோர்மண்ணெனச் சிதைத்து நின்றோனே
பூவையைத் துரும்பென மதித்துவென்றோனே

10. எண்ணுகேனெனுந்திருத்தாண்டக மோதி
யிறைவனற்றிருவடி கலந்தருட்சோதி

11. திரிகரணமுமரன் றிருவடிக் கமைத்தோய்
சிறியனேன்பவத் துயரனைத்தையுங் குமைத்தாள்

12. வாகீசப்பெரு முனிபதநினைந் தழுவோம்
வன்பவக்கடல்கடந் தரனடி தொழுவோம்

13. அப்பர்தந் திருவடிக் கருச்சனைபண்ணுவோ
மிப்பிறப் பறுத்துநம் மிறைவனைநண்ணுவோம்

14. திருநாவுக்கரையன்றன் சேவடிசேர்வோந்
தீவினைக்கடல்கடந் தரனடிசார்வோம்

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் நாமாவளி.

1. கைலைமுன் னாலால சுந்தரனே
கடவுட னாக்ஞையால் வந்தவனே

2. திருநாவலூர்ச் சடையனிசை ஞானியார்
திருவயிற் றவதாரஞ் செய்தவனே

3. நம்பியாரூர னெனுநாமங் கொண்டவனே
சம்புவைத் திருமணச்சபையிற்கண்டவனே

4. பெருமானைப் பித்தனென் றேசிநின்றவனே
திருமணந்தடுத்தா னாளச்சென்றவனே

5. அத்தன்முன் னடியெடுத் தளிக்கப்பெற்றவனே
பித்தாவென் றியம்பியேபெருமையுற்றவனே

6. வன்றொண்ட னெனுநாம மரனாற்பூண்டவனே
மாதேவனைத்தோழனாய்த் தினமுங்கொண்டவனே

7. திருமுது கிரிதனி லரன்றரும்பொருளை
திருவாரூர்த்திருக்குளந்தனி லெடுத்தவனே

8. திருப்புகலூரான் செங்கல்லைச்சுவர்ணமாய்ச்
செய்தளிக்கப்பரவை மனையிற் சேர்த்தவனே

9. குண்டையூர்தனிற்பெற்ற நெற்குவைமுழுவதுங்
கோளிலிக் கடவுளாற் கொண்டுவந்தவனே

10. திருப்புக்கொளியூர்தனில் முதலையுண்ட பிள்ளையைத்
திரும்பிவரப் பதிகஞ் செய்த வல்லவனே

11. திருவஞ்சைக் களத்துறைப்பாணனைப் படிவெள்ளைத்
திருவானை தனிலேறிக் கைலைசென்றவனே

12. இன்னும்பல வற்புதமியற்று தந்திரனே
வெளியனைத்திருவடிக் கழுத்துசுந்திரனே

13. திருவாரூர்தனிலுறை திவ்விய சுந்தரனே
திருவிகற்பககத்தி லென்னை வையரனே

14. சுந்தரமூர்த்திநற் றுணையடிப் புணையாற்
சொச்சொரூபானந்த லிணையடியணைவோம்

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.

---

## மாணிக்கவாசகசுவாமிகள் நாமாவளி.

1. வைகைசேர் வாதவூர்தனிற் பிறந்தவனே
வாதவூ ரடியெனப் பெயர்சிறந்தவனே

2. மதுரையரிமர்த்தன பாண்டியன் விருப்புற்ற
மந்திரியெனஒரு முதன்மை பெற்றவனே

3. குதிரைகொள் ளரும்பொருள் முழுதுங்கொண்டவனே
குவலயம் புகழ்பெருந் துறையைக்கண்டவனே

4. குருந்தினிலுறைபர குருவைக்கண் டவனே
கூறருமோர்மொழி ஞானங்கொண்டவனே

5. பரசிவமேகுரு வாகப் பெற்றவனே
பவங்கடந் தருணிலையேகுற்றவனே

6. ஆணிப்பொன் னவமணிபோற்றுதி யறைந்தாய்
மாணிக்கவாசகனென் றேபெயர்நிறைந்தாய்

7. பரிகொளக் கொணர்ந்தநற் பொருள்முழுதையுமே
பரசிவத் திருப்பணி புரிந்தநற்றெய்வமே

8. நரியைநின் றனக்கரன் பரிசெயப்பழய
நற்பரியொழித்துயர் கீர்த்திபெற் றவனே

9. பாண்டியன்பெருந்துயர் விரவ வின்றவனே
பட்டணங்கெட வைகைபெருக வென்றவனே

10. பிட்டுக்குமண்சுமந் தரனடி படநீ
பெருந்துறைதிரும்பிவந் திருந்துதி புரிந்தாய்

11. தில்லையில்புத்தர்களை வாதில் வென்றவனே
திருப்பாட்டா லூமைப்பெண் ணோதநின்றவனே

12. அரும்பாடல்களை யரன்வரையச் செய்தவனே
யாண்டவன் கையொப்பநிறையப்பெய்தவனே

13. சிதம்பர மெனுஞ்சின்மய வெளியில்
செழுஞ்சுடராய்க்கலந் தன்புடையொளியே

14. அழுதடியடைந்த வென்னரு மணியே
யடியனைக் காத்தருள் குருமணியே

15. மாணிக்கவாசக மாமணி யேயுன்றன்
மலரடியெனக்கருமேணியே

16. மாணிக்கவாசக ரென்போ மேநம்
வல்வினை முழுவது பின்போமே

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.

## பொதுவடியார் நாமாவளி.

1. ஞானசம்பந்தவாகீசதிரு
நாவலூர்வாதவூர்நாதநமோநமோ

2. அறுபத்துமூவர்க ளடிகள் நந்தலையே
யழிவிலாக் கைவல்லிய பதமெனுநிலையே

3. செறிவுற்றுவிளங்கிய சிவநேசர்பதமே
சிந்திப்போநமக்கருள்மெய்முத்திசதமே

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.

---

## வாழி.

1. நால்வர்க ளுயர்திரு வடிவாழி
நால்வருக் கடியவ ரடிவாழி

2. அறுபத்துமூவர்க ளடிவாழி
யவர்களுக் கடியவ ரடிவாழி

3. அரனடி தொழுபவர்பலர்வாழி
யடியனேன் குருவடி மிகவாழி

திருச்சிற்றம்பலம்

நாமாவளிகள் முற்றிற்று.

ஸ்ரீமத்வீரசேகரஞானதேசிகமூர்த்திகள்

திருவடிகளேசரணம்.

உ

# விளம்பரம்.

இப்புத்தகம் விற்றுள்ள பொருள்
ஸ்ரீ பழனியாண்டவன் ஆலயத்திருப்பணிக்கே உரியது
இஃது வேண்டுவோர்

ஒரத்தநாடுசத்திரம் ஸ்ரீ அம்மன்சந்நிதி
அக்கிரகாரம்
மகா-ள-ள-ஸ்ரீ கோபாலய்யரவர்கள் குமாரர்
ரெங்கசாமி அய்யரவர்களிடத்திலும்

இராஜமன்னார்குடி
பெரியகடைவீதி ஜவுளி
வீ. குட்டிமுதலியாரவர்களிடத்திலும்

தஞ்சைமாநகரம் குஜ்ஜிலி மார்க்கெட்டு
புத்தகவியாபாரம்
த. தி. சோ. சாமிநாதபிள்ளையிடத்திலும்
விலை அணா-௧. கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்